கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது/ சிறப்புக் கலைமாணித் தேர்வு

2015/ 2016 ஆகஸ்ட் - 2018

# HY/S 3213 History of Sri Lanka AD 1505 - 1970

# HY/S 3213 இலங்கை வரலாறு கி.பி 1505 - 1970

நேரம் : 3 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி – I

01. "இலங்கை வரலாற்றில் 1818, 1848 ஆம் ஆண்டு மலையக கிளர்ச்சிகள் சுதந்திர உணர்வின் வெளிப்பாடாகும்" இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.
    (அ) 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்க. (10 புள்ளிகள்)
    (ஆ) 1848 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் விளைவுகள் (10 புள்ளிகள்)

02. இலங்கையில் பெருந்தோட்டத்துறையின் விரிவாக்கத்தினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் துறை சார்ந்த மாற்றங்கள் தொடர்பான மேல்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.
    (அ) அரசும் பொருளாதாரமும். (10 புள்ளிகள்)
    (ஆ) சமூக நிலை (10 புள்ளிகள்)

03. "சுமார் மூன்று நூற்றாண்டு காலம் நிலைத்திருந்த கண்டி இராச்சியம் வீழ்ச்சி அடைந்தமை இலங்கை வரலாற்றில் திருப்புமுனைச் சம்பவமாகும்" மேற்படி கூற்றினை அடிப்படையாகக்கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.
    (அ) கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் (10 புள்ளிகள்)
    (ஆ) கண்டி ஒப்பந்தத்தின் பிரதான அம்சங்களைக் குறிப்பிட்டு அதன் விளைவுகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. 1833 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட கோல்புறூக் கமரன் அரசியல் திட்டம் அதன் பிற்பட்ட அரசியல் திட்ட சீர்திருத்தங்களுக்கு அடிப்படையாக அமைந்த விதத்தினை சுருக்கமாக விளக்குக. (20 புள்ளிகள்)

05. இலங்கை அரசியல் திட்ட வரலாற்றில் சோல்பரி அரசியல் திட்டச் சீர்திருத்தம் பெறும் முக்கியத்துவத்தினை ஒப்பியல் ரீதியில் சுருக்கமாக ஆராய்க. (20 புள்ளிகள்)

06. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் நிலவிய அரசியல் சூழ்நிலைகள் பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

07. காலனித்துவ கால சமயக் கொள்கைகள் பற்றி ஒப்பிட்டு ஆராய்க. (20 புள்ளிகள்)